# நோயாளி தகவல் கையேடு

## [PIOGLITAZONE]

### இந்த மருந்து எதற்கானது?

இந்த மருந்து நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இன்சுலினுக்கு உங்கள் உடல் அதிக கூருணர்வுடன் செயல்படச் செய்வதன்வழி, உங்கள் இரத்தச் சர்க்கரை அளவைக் குறைப்பதற்கு இது உதவுகிறது. உங்கள் உடலில் உள்ள இரத்தச் சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்துவதற்கு இன்சுலின் உதவுகிறது. ஆரோக்கியமான உணவு, வழக்கமான உடற்பயிற்சி போன்ற வாழ்க்கைமுறை மாற்றங்களுடன் சேர்ந்து, இரத்தச் சர்க்கரை அளவைக் குறைப்பதற்கு இந்த மருந்து துணை புரிகிறது.

### இந்த மருந்தை நான் எப்படி உட்கொள்ளவேண்டும் / பயன்படுத்தவேண்டும்?

இந்த மருந்து தினமும் ஒரு முறை உட்கொள்ளப்படுகிறது. நீங்கள் சாப்பாட்டுக்கு முன்னர் அல்லது பின்னர் இந்த மருந்தை உட்கொள்ளலாம்.

### இந்த மருந்தை நான் உட்கொள்ள / பயன்படுத்த மறந்துவிட்டால் என்ன செய்வது?

நீங்கள் ஒரு வேளைக்கான மருந்தை உட்கொள்ள மறந்துவிட்டால், நினைவுக்கு வந்தவுடன் தவறவிட்ட மருந்தை உட்கொள்ளுங்கள். அடுத்த வேளைக்கான மருந்து உட்கொள்ளவேண்டிய நேரம் நெருங்கிவிட்டால், வழக்கமான அளவு மருந்தை மட்டும் உட்கொள்ளுங்கள்.

தவறவிட்ட மருந்துக்காக இருமடங்கு அல்லது கூடுதல் மருந்து உட்கொள்ளவேண்டாம்.

### நான் என்னென்ன முன்னெச்சரிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்?

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் தெரியப்படுத்துங்கள்:

- இந்த மருந்துக்கு அல்லது இந்த மருந்திலுள்ள மற்ற உட்பொருட்களுக்கு ஒவ்வாமை இருக்கிறது
- நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள், கருவுறத் திட்டமிடுகிறீர்கள், அல்லது தாய்ப்பால் ஊட்டுகிறீர்கள்
- இதயச் செயலிழப்பு பிரச்சினை இருக்கிறது (உங்கள் இதயம் வழக்கமான முறையில் துடிக்கவில்லை)
- உங்கள் உடலில் நீர் தேங்கி இருக்கிறது
- மாகுலர் எடிமா என்றழைக்கப்படும் நீரிழிவு நோயுடன் தொடர்புடைய கண் நோய் இருக்கிறது (கண்ணின் கரும்புள்ளியில் நீர் தேங்குவதால் ஏற்படும் வீக்கம்)
- கல்லீரல் பிரச்சினைகள் இருக்கின்றன
- இதற்குமுன் சிறுநீர்ப்பை புற்றுநோய் பாதித்திருக்கிறது
- இதற்குமுன் எலும்பு முறிவுகள் ஏற்பட்டிருக்கின்றன

### இந்த மருந்தின் பொதுவான பக்கவிளைவுகள் என்ன?

எல்லா மருந்துகளையும் போலவே, இந்த மருந்தும் சில உத்தேசப் பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். ஆனால், எல்லோருக்கும் பக்கவிளைவுகள் ஏற்படுவதில்லை. பக்கவிளைவுகளில் ஏதாவது கடுமையாகி தொல்லை கொடுத்தால், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.

Pioglitazone மருந்தின் பொதுவான பக்கவிளைவுகளில் உள்ளடங்குவன:

- காலில் வீக்கம்
- தலைவலி
- எலும்புக்குழி வீக்கம் மற்றும் சுவாசக்குழாயில் கிருமித்தொற்று
- தொண்டைப் புண்
- எடை அதிகரிப்பு
    - இந்த மருந்தினால் எடை அதிகரிப்பதைத் தடுக்க, வழக்கமான உடற்பயிற்சி செய்யுங்கள்

## நான் உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடவேண்டிய அரிய, ஆனால் கடுமையான பக்கவிளைவுகள் என்ன?

மருந்து ஒவ்வாமையின் அறிகுறிகளில் பின்வருபவற்றுள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவை உள்ளடங்கும்:

- முகத்தில் / கண்களில் / உதடுகளில் / நாக்கில் வீக்கம்
- மூச்சுத்திணறல்
- உடலெங்கும் தோல் அரிப்பு

இந்த அறிகுறிகள் ஏதேனும் உங்களுக்கு ஏற்பட்டால், நீங்கள் உடனடியாக மருந்தை நிறுத்திவிட்டு, உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்.

பின்வரும் கடுமையான பக்கவிளைவுகள் நேர்ந்தால், நீங்கள் உடனடியாக உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரைப் பார்க்கச் செல்லவேண்டும்:

- சிறுநீர்ப்பை புற்றுநோய். சிறுநீர்ப்பை புற்றுநோயின் அறிகுறிகளில் உள்ளடங்குவன:
    - சிறுநீரில் இரத்தம்
    - சிறுநீர் கழிக்கும்போது வலி
    - சிறுநீரைச் சரியாகக் கட்டுப்படுத்த இயலாமை
    - அடிக்கடி சிறுநீர் கழிக்கவேண்டும் போன்ற உணர்வு ஏற்படுதல்

- இதயச் செயலிழப்பு அல்லது அறிகுறிகள் மோசமடைவதாக உங்களுக்குத் தோன்றுகிறது. மோசமடையும் இதயச் செயலிழப்பின் அறிகுறிகளில் உள்ளடங்குவன:
    - மூச்சுத்திணறல்
    - உடல் எடை திடீரென வேகமாக அதிகரிப்பு
    - காலில் அளவுக்கதிக வீக்கம்

- கல்லீரல் பிரச்சினைகள்: கருமை நிற சிறுநீர் அல்லது வெளிர் நிற மலம், உங்கள் கண்கள் அல்லது சருமம் மஞ்சளாகுதல், கடுமையான பசியின்மை, வயிற்றுவலி, குமட்டல் அல்லது நீங்காத வாந்தி

- மாகுலர் எடிமா (கண்ணின் கரும்புள்ளியில் நீர் தேங்குவதால் ஏற்படும் வீக்கம்)

மாகுலர் எடிமாவின் அறிகுறிகளில் உள்ளடங்குவன:

- மங்கலான பார்வை
- கண்பார்வையில் மாற்றம்

## இந்த மருந்தை நான் உட்கொள்ளும்போது / பயன்படுத்தும்போது எந்தெந்த உணவை அல்லது மருந்தைத் தவிர்க்கவேண்டும்?

இந்த மருந்தை எடுத்துக்கொள்ளும் வேளையில் மது அருந்துவதைத் தவிர்க்கவேண்டும். ஏனென்றால், இரத்தச் சர்க்கரை குறைவு ஏற்படக்கூடிய அபாயம் அதிகரிக்கலாம்.

## இந்த மருந்தை நான் எப்படி பத்திரப்படுத்தி வைக்கவேண்டும்?

சூரிய ஒளி நேரடியாகப் படாத, குளுமையான, ஈரமில்லாத இடத்தில் பத்திரப்படுத்தி வைக்கவேண்டும். இந்த மருந்து பிள்ளைகளின் கைக்கு எட்டாமல் இருக்கவேண்டும்.

## இந்த மருந்தைப் பாதுகாப்பான முறையில் வீசுவது எப்படி?

இந்த மருந்தை ஒரு கறுப்பு நிறக் குப்பைப் பையில் போட்டு, இறுக்கமாகக் கட்டிய பிறகு, குப்பைத்தொட்டியில் வீசவேண்டும்.

## பொறுப்புத்துறப்பு

*மேற்குறிப்பிடப்பட்ட பக்கவிளைவுகள் முழுமையாக ஏற்படக்கூடியவை அல்ல என்பதை கருத்தில் கொள்ளவும்.இம்மருந்தை எடுத்துக் கொள்வதால் தங்களுக்கு ஏதேனும் பக்க விளைவுகள் ஏற்பட்டது எனக் கருதினால் தங்களது மருத்துவர் அல்லது மருங்தகரிடம் கலந்து ஆலோசிக்கவும்.*

*பரிந்துரைக்கப்படும் அளவைவிட அதிக மருந்தை நீங்கள் உட்கொண்டால், உடனடியாக மருத்துவக் கவனிப்பு நாடுங்கள். இந்தப் பக்கத்தில் உள்ள தகவல்கள், உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடமிருந்து கிடைக்கும் தகவலுக்கு மாற்றாகாது. தயவுசெய்து, மேல்விவரம் அறிய உங்களது சுகாதாரப் பராமரிப்பு நிபுணரிடம் ஆலோசனை நாடுங்கள்.*

*இந்தக் கட்டுரை தேசிய மருந்து தகவல் பணிக்குழு உறுப்பினர்களால் சுகாதார அமைச்சின் ஆதரவோடு உருவாக்கப்பட்டது. இந்தப் பணிக்குழுவில் குழுமப் பங்காளிகள் (தேசிய சுகாதாரப் பராமரிப்புக் குழுமம், தேசியப் பல்கலைக்கழகச் சுகாதாரக் குழுமம், சிங்ஹெல்த்), சமூக மருந்துக்கடைகள் (கார்டியன், யூனிட்டி, வாட்சன்ஸ்), சிங்கப்பூர் மருந்தியல் சங்கம் ஆகியன உள்ளடங்குகின்றன. இந்த உள்ளடக்கம், மருந்துக்கடைகளிலும் சுகாதாரப் பராமரிப்பு நிலையங்களிலும் மருந்து கிடைக்குமா என்ற விநியோகத் தகவலைப் பிரதிபலிக்கவில்லை. இத்தகைய தகவலுக்கு, அந்தந்த நிலையங்களிடம் நீங்கள் கேட்டறியலாம்.*